RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/S/SVA/2023-2025

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ்
HOTEL SREE PALANIS
Veg

மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்

கார்த்திக் மருத்துவமனை
சிவகங்கை

சிவகங்கை மலர்-4 இதழ்-63 09 மார்ச் ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# ஸ்ரீராம் கல்வி நிறுவனங்கள் சார்பாக சர்வதேச மகளிர் தின விழா





தாம்பரம் மார்ச்.9

பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா, கல்லூரி வளாகத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி மேயர் கே.வசந்தகுமாரி, திருவள்ளூர் மாவட்டம் சோதனை அதிகாரி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை , எஸ்.சுதா, ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை சார்பில் கஸ்தூரி பார்த்தசாரதி அவர்கள் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார். விழாவின் தொடக்கமாக மெக்கானிக்கல் துறை மற்றும் கீணிசி தலைவர் முனைவர் ஜி.சுகன்யா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று பேசியதோடு இவ்விழாவை நடத்துவதற்கு அனுமதி அளித்த கல்லூரி நிர்வாகம் மற்றும் முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ் பாபு அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்ந்தார். இவர்களை தொடர்ந்து பேசிய சிறப்பு அழைப்பாளர் தாம்பரம் மாநகராட்சி மேயர் கே.வசந்தகுமாரி, அவர்கள் பேசுகையில், இக்கல்லூரியில் தான் மாணவியாக இருந்தபோது நிகழ்ந்த கல்லூரி அனுபவங்களை மாணவிகள் முன்னிலையில் பகிர்ந்து கொண்டார். மேலும், தன்னுடைய வளர்ச்சிக்கு பெருந்துணையாக இருந்தது இக்கல்லூரியில் படித்த பொறியியல் படிப்பு என பெருமிதம் கொண்டார். பெண்கள் தற்போதைய சமூகத்தை பயமின்றி அணுக வேண்டும் என்று தன் சுய அனுபவங்கள் மூலம் விளக்கிக் கூறினார். மேலும் அரசு வேலை வாய்ப்புகளிலும் போட்டித் தேர்வுகளிலும் குறிப்பாக ( ஐஏஎஸ் ) பயிற்சியிலும் மாணவிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு அரசு அதிகாரிகளாக மாற வேண்டும் என அறிவுறுத்தினார். வாழ்வின் வளர்ச்சிக்கு தேவையான பாதையை வகுத்து அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று ஊக்கம் தரும் உரையை நிகழ்த்தியதோடு மகளிர் தின வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

அடுத்ததாக திருமதி எஸ். சுதா, மாவட்ட சோதனை அதிகாரி , குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை (திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் பேசுகையில் இன்றைய சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இருக்கும் பாலியல் துன்புறுத்தல் என பல்வேறு சவால்களை எதிர்த்து போராடும் மனப்பான்மையை மாணவிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று உரைத்தார். வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் கைபேசியை உபயோகித்தல், பெண்களுக்கான சட்டங்களை தெரிந்து கொள்ளுதல், மேலும் மாணவிகள் அரசு பணியில் இடம்பெறும் முனைப்போடு செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியதோடு , மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பேசிய ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை உறுப்பினர் திருமதி. கஸ்தூரி பார்த்தசாரதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். விழாவில் ஸ்ரீராம் கல்வி நிறுவனங்களை சார்ந்த கல்லூரி முதல்வர்கள் மற்றும் பள்ளி முதல்வர் பங்கு பெற்றனர். இதன் தொடர்ச்சியாக சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு சால்வையும், நினைவு பரிசு வழங்கப்பட்டது. முன்னதாக மகளிர் தின விழாவையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வென்ற மாணவியருக்கு பரிசும் , பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கீணிசி தலைவர்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். கீணிசி தலைவர் ஆண்டாள் நன்றி உரை ஆற்றினார்.ன இறுதியாக தேசிய கீதத்துடன் இவ்விழா நிறைவுற்றது..